<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண்.30/2012</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 11.03.2020**

**பெயர் - ராஜேந்திரன்**

**த/பெ - கிருஷ்ணன்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -11.44am**

<u>**குறுக்கு விசாரணை -**</u>

என் தாயார் பெயர் பட்டம்மாள். பாப்பாத்தி அம்மாள் என்றும் அழைப்பர். அடையாள அட்டைகளில் பாப்பாத்தி அம்மாள் என்றே உள்ளது. என் தாயார் இறந்து 3 ஆண்டுகள் ஆகிறது. என் தந்தை பெயர் கிருஷ்ணன். அவரின் தந்தை பெயர் மொட்டைகான் நாயக்கர். அவரை மொட்டை நாயக்கர் என்றும் அழைப்பர். என் தந்தை பெயரில் வழக்கு சொத்திற்கான கிரைய ஆவணம் இல்லை பட்டா உள்ளது. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்பதால் பத்திரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் தந்தையின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு என் தந்தை தான் ஒரே ஆண்மகள். சகோதரிகள் உள்ளனர். என் தாத்தாவை நான் பார்த்தில்லை. அவர் இறந்து சுமார் 80 ஆண்டுகள் இருக்கும். வழக்கு சொத்து மொட்டைகானின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. என் படி வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது எவ்வளவு கிரைய தொகை என்றும் எனக்கு தெரியாது. வழக்கு

சொத்து சிவன் கோவில் வீதியில் உள்ளது. நான் குடியிருப்பது பெருமாள் கோவில் குறுக்கு தெரு. 2ம் பிரதிவாதியும் பொருமாள் கோவில் குறுக்கு தெருவில் தான் உள்ளார். ஒரே மனையில் பாகப்பிரிவினை மூலம் பிரித்துக்கொண்ட பிறகு இரு வீடுகளாக உள்ளது. அதில் குடியுள்ளோம். பாகப்பிரிவினை நடந்து 2 ஆண்டுகள் இருக்கும் அதற்கு பாகப்பிரிவினை ஆவணம் பதிவாகி உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பெருமாள் கோவில் தெருவில் உள்ள மனையின் விஸ்தீரணம் 11 சென்ட். மேற்கூறிய பெருமாள் கோவில் தெருவில் உள்ள சொத்து என் தந்தையின் பரம்பரை சொத்து. பெருமாள் கோவில் தெருவில் உள்ள சொத்து பூர்வீக சொத்து என்பதால் பத்திரம் இல்லை பட்டா மட்டும் உள்ளது. அதே போல் வழக்கு சொத்தும் பூர்வீக சொத்து என்பதால் தான் கிரையம் ஆவணம் இல்லாமல் பட்டா மட்டும் உள்ளது என்றால் சரியல்ல கிரைய ஆவணம் தொலைந்து விட்டது. மேற்படி கிரைய ஆவணத்தை பெற முயற்சித்தேனா என்றால் இல்லை. பத்திர பதிவு அலுவலகத்தில் என் தந்தை கிரையம் வாங்கியதாக ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என்னால் அந்த ஆவணத்தை பெற முடியும். என் தந்தை கிரையம் வாங்கியது உண்மையாக இருந்தால் அந்த கிரையம் பற்றிய விவரத்தை என் வழக்குரையில் கூறி இருப்பேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம் -12.08pm**